RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 232 | ஆகஸ்டு 27, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மேட்டூர் அணையை திறக்கும் முதல்வர் விஜய்? காவிரி டெல்டா பாசனத்திற்காக நீர் திறக்க திட்டம்

சென்னை: ஆக.27-

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையை திறந்து வைக்க தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் நாளை மறுநாள் மேட்டூர் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது வழக்கம். இதன்மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சுமார் 17 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். ஆனால், இந்த ஆண்டு போதிய நீர் இருப்பு இல்லாததால், கடந்த ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் 88 அடியை எட்டியுள்ளது. விரைவில் 90 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அணை திறப்பு குறித்து சட்டப்பேரவையில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த், விரைவில் நல்ல செய்தி அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.




இந்நிலையில், முதலமைச்சர் விஜய் மேட்டூர் அணைக்கு வந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து முன்னேற்பாடாக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேற்று மேட்டூர் அணையில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அணையின் வலது கரை, மேல்மட்ட மதகில் மின் விசையை இயக்கும் பகுதி உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது நீர்வளத்துறை செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர்கள், டிஎஸ்பி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 13,415 கன அடி நீர் வந்த நிலையில், அன்று மாலையில் 12,231 கன அடியாக சரிந்தது. இதனைத்தொடர்ந்து, நேற்று காலை 12,534 கன அடியாக பதிவான நீர்வரத்து, நேற்று மாலை 10,405 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைவிட நீர்வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 88.84 அடியாகவும், நீர் இருப்பு 51.33 டிஎம்சியாகவும் உள்ளது. நீர்மட்டம் 90 அடியை நெருங்கி வரும் நிலையில், காவிரி டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டாஸ்மாக் ஊழியர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முதல்வர் விஜய்க்கு மு.வீரபாண்டியன் வலியுறுத்தல்

சென்னை: ஆக.27-

டாஸ்மாக் பணியாளர்கள் கோரிக்கைகள் மீது முதல்வர் விஜய் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசு நிறுவனமான தமிழக மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) கடந்த 23 ஆண்டுகளாக சில்லரை மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறது. ரூ.15 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் தற்போது அரசுக்கு ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் கோடிக்கும் மேல் கலால் வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி செலுத்தி வருகிறது.

அரசின் வரி வருவாயில் மூன்றில் ஒரு பங்கு அளவில் பங்களிப்பு செலுத்தும் இந்த டாஸ்மாக் நிறுவனத்தின் பணியாளர்கள் 23 ஆண்டுகளாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் பகுதி நேர ஒப்பந்தப் பணியாளர்களாக வகைப்படுத்தப்பட்டிருப்பது, தொழிலாளர் நலச் சட்டங்களுக்கும், தொழிலாளர் நலன் சார்ந்த கொள்கைகளுக்கும் எதிரானதாகும்.

தமிழகத்தில் 1981-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணி நிரந்தரத் தகுதி வழங்கல் சட்டத்துக்கு முரணாக அரசு நிறுவனம் செயல்படுவது சரியல்ல. மேலும், நிலையாணை சட்டப்படி, டாஸ்மாக் நிறுவனம் இதுவரை நிலையாணை உருவாக்காமல், பணி வரன்முறை ஏதுமின்றி பணியாளர்களை பாதுகாப்பற்ற அசாதாரண பணிச் சூழலுக்கு நெட்டித் தள்ளியுள்ளது.

கொள்முதல் முனையில் ஏற்பட்டு வந்த நிதிக் கசிவு தடுக்கப்பட்டு கூடுதல் வருவாய் ஈட்டும் வரவேற்கத்தக்க நடவடிக்கையை மேற்கொண்ட தமிழக அரசு, பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச் சூழலை உருவாக்கி தருவதில் அக்கறை காட்ட வேண்டும். டாஸ்மாக் பணியாளர்களுக்கு தமிழக கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் சட்டம் பொருந்தும் என சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இதுவரை டாஸ்மாக் நிர்வாகம் மதிக்கவில்லை என்ற புகாரும் உள்ளது.

இந்த நிலையில் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் மற்றும் காலிப்பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டத்துக்கு கூடுதல் பணியாளர் நியமனம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 28-ஆம் தேதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக ஏஐடியூசி, சிஐடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

டாஸ்மாக் பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகள் மீது தமிழக அரசின் முதல்வர் தலையிட்டு, பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, சுமுகத் தீர்வு காண வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

## ஆவணி அவிட்டம், பவுர்ணமியை முன்னிட்டு இன்று பத்திரப்பதிவுக்கு கூடுதல் டோக்கன்

சென்னை: ஆக.27-

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணி அவிட்டம், பவுர்ணமி தினமான இன்று ஆக.27-ம் தேதி பத்திரப்பதிவுக்கு கூடுதல் டோக்கன்கள் வழங்கப்படும் என்று பதிவுத்துறை தலைவர் அறிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: சுபமுகூர்த்த மற்றும் விசேஷ தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் டோக்கன்கள் ஒதுக்கப்படுகிறது.

தற்போது ஆவணி மாதத்தில் வரும் ஆவணி அவிட்டம் மற்றும் பௌர்ணமி தினமான ஆக.27-ம் தேதி அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக டோக்கன்கள் ஒதுக்கீடு செய்ய பல்வேறு தரப்பு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

அதை ஏற்று நாளை, ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 டோக்கன்கள், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 டோக்கன்கள், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களுடன் ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களுடன் கூடுதலாக 4 டோக்கன்களும் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தை வெளிமாநில நிறுவனங்களுக்கு தாரை வார்க்க திட்டமா? - டிடிவி தினகரன்

சென்னை: ஆக.27-

"பொங்கல் பண்டிகையையொட்டி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கான உற்பத்தி அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தைப் போல, இத்திட்டத்தையும் வெளிமாநில நிறுவனங்களுக்கு தாரை வார்க்க தவெக அரசு திட்டமிட்டுள்ளதா?" என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வழக்கமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்திலேயே வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்வதற்காக நெசவாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்த நிலையில், நடப்பாண்டில் ஆகஸ்ட் மாதம் நிறைவடையும் தருவாயிலும் அனுமதி வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதால், அத்தொழிலையே நம்பியிருக்கும் சுமார் 3 லட்சம் நெசவாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.



கூடுதல் தரம் கொண்ட புதிய ரக நூலில் வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்யும் வகையில், கடந்த ஜூலை மாதமே முதற்கட்டமாக ரூ.300 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், அதற்கான உற்பத்தியைத் தொடங்குவதற்கு நெசவாளர்களுக்கு அனுமதி வழங்காமல் காலம் தாழ்த்தி வருவது கடும் கண்டனத்திற்குரியது.

உற்பத்தி, நெசவு, தரப் பரிசோதனை, போக்குவரத்து மற்றும் விநியோகம் என குறுகிய காலத்தில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில், வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியை வழங்காமல் அரசு காட்டும் அலட்சியம், பொங்கல் பண்டிகையையொட்டி மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்திலும் பல்வேறு நிபந்தனைகளை விதித்து, பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க திட்டமிட்டிருக்கிறதா?

அல்லது ஏற்கனவே தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை வெளிமாநில நிறுவனங்களுக்கு வழங்கியதைப் போல, இத்திட்டத்தையும் வெளிமாநில நிறுவனங்களுக்கு தாரை வார்க்க தவெக அரசு முடிவு செய்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே அரசின் விலையில்லா வேட்டி, சேலைகள் பயனாளிகளைச் சென்றடையும் வகையிலும், சுமார் 3 லட்சம் நெசவாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடும் வகையிலும், விலையில்லா வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியை உடனடியாக வழங்கிடுமாறு தவெக அரசை வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மீனாட்சி அம்மன் கோயிலை சுற்றி காவல் துறையினர் சைக்கிளில் ரோந்துப் பணி

மதுரை: ஆக.27-

மீனாட்சி அம்மன் கோயில் நான்கு சித்திரை வீதிகளிலும் பக்தர்களின் பாதுகாப்பை முன்னிட்டு மாநகர காவல் துறையினர் சைக்கிளில் ரோந்து பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரையின் அடையாளமாக விளங்கும் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர். இதனால், கோயிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளிலும் பக்தர்கள் பாதுகாப்பாக நடமாடும் வகையில் வாகனப் போக்குவரத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சித்திரை வீதிகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் மதுரை மாநகர காவல்துறையினர் சைக்கிளில் ரோந்து பணியை தொடங்கியுள்ளனர். இதற்காக 5-க்கும் மேற்பட்ட சைக்கிள்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.



காவல் துறையினர் சைக்கிள்களில் சித்திரை வீதிகளைச் சுற்றி வந்து, கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பு, சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள், கூட்ட நெரிசல் உள்ளிட்டவற்றை கண்காணித்து வருகின்றனர். வாகனங்கள் செல்ல முடியாத குறுகிய வீதிகளிலும் சைக்கிள் மூலம் எளிதாகச் சென்று கண்காணிப்பு மேற்கொள்ள முடியும் என்பதால் இந்த நடைமுறை, பாதுகாப்புப் பணிக்கு பயனுள்ளதாக இருப்பதாக காவல் துறையினர் கருதுகின்றனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை மாநகரில் காவல்துறையினர் சைக்கிள்களில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அதே நடைமுறை மீனாட்சி அம்மன் கோயில் பகுதியில் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நவீன கண்காணிப்பு வசதிகள் அதிகரித்துள்ள நிலையிலும், மக்கள் அதிகம் கூடும் பாரம்பரியான ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் எளிமையான சைக்கிள் ரோந்து மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது குறித்து மதுரை மாநகர காவல் துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்ட போது, "பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சித்திரை வீதிகளில் பெரும்பாலும் பக்தர்களின் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும். அங்கு நான்கு சக்கர வாகனங்களையோ அல்லது இரு சக்கர வாகனங்களையோ பயன்படுத்துவது சரியாக இருக்காது.

இதனால் தான் தற்போது சைக்கிள் ரோந்து பணியை அறிமுகம் செய்துள்ளோம். கூட்டத்திற்குள் எளிதாக புகுந்து வருவதற்கு சைக்கிள் மிக வசதியான வாகனமாகும். அதுமட்டுமன்றி மீனாட்சி அம்மன் கோயிலை சுற்றி நிறைய சிறிய வீதிகள் உள்ளன. அவற்றில் எல்லாம் பயணித்து பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சைக்கிள் ரோந்து சரியானதாக இருக்கும்" என தெரிவித்தனர்.

## சென்னை மாநகராட்சியில் மண்டல வாரியாக பணிகளை மேற்கொள்ள 7 அமைச்சர்கள் நியமனம்

சென்னை: ஆக.27-

சென்னை மாநகராட்சியில் மண்டல வாரியாக பணிகளை மேற்கொள்ள 7 அமைச்சர்களைப் பொறுப்பு அமைச்சர்களாக நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் அடிப்படையில், திருவொற்றியூர், மணலி மண்டலம் - ரமேஷ். மாதவரம், தண்டையார்பேட்டை மண்டலம் - லோகேஷ் தமிழ்ச்செல்வன். ராயபுரம், திருவிக நகர் - அருண்ராஜ். அம்பத்துர், அண்ணா நகர், தேனாம்பேட்டை - விஜய் பாலாஜி. கோடம்பாக்கம், வளசவரவாக்கம் - டி.கே.பிரபு. ஆலந்துர், அடையார் - விஜய் தமிழன் பார்த்திபன். பெருங்குடி, சோழிங்கநல்லூர் மண்டலங்கள் க.விக்னேஷ் ஆகியோர் பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்



■ ஒசூர் ராயல்ஸ் ரோட்டரி சங்கம் சார்பில் காசநோய் நோயாளிகளுக்கு சத்தான உணவு வழங்கப்பட்டது. ஒசூர் புதிய அரசு மருத்துவமனையில் 20 காசநோய் நோயாளிகள் பயனடைந்தனர். ரோட்டேரியன்கள் மனோஜ், அஜய்குமார், ஜோஷ் வர்கீஸ் ஜாய், ஹபீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர். காசநோய் நோயாளிகளுக்கான இச்சேவைத் திட்டம் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



# கனகமுட்லு அரசுப் பள்ளியில் கள்ளச்சாராய ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி, ஆக.27-

கிருஷ்ணகிரி அருகே கனகமுட்லு அரசு மேல்நிலைப் பள்ளியில் கள்ளச்சாராய ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் டிஐஜி மூர்த்தி தலைமை வகித்து, விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். போதைப்பொருட்கள் மற்றும் கள்ளச்சாராயத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்கள் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். தொடர்ந்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் : நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

நீலகிர, ஆக.27-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 28.08.2026 அன்று காலை 10.00 மணியளவில் உதகை RCTC (பழங்குடியினர் பண்பாட்டு மையம்) கார்டன் சாலை, ஊட்டி, கீழ்தள கூட்ட அரங்கில் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெறவுள்ளது. மாற்றுத்திறனாளிகள் எளிதில் வங்கிகடன் பெறுவது தொடர்பாக வழிவகைகளை முன்னோடி வங்கி மேலாளர், கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட தொழில் மையம், தாட்கோ மூலம் விண்ணப்பித்து பயன் பெறலாம். எனவே, நீலகிரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள், தன்னார்வு அமைப்புகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



# புழல் எம்.ஜி.ஆர்.இலவச கணினி பயிற்சி மையத்தில் தேர்ச்சி பெற்ற மாணவ- மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், ஆக.27-

மாதவரம் தொகுதி புழல் ஆலமரம் பகுதியில் அமைந்துள்ள எம்ஜிஆர் கல்வி மற்றும் பொதுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் எம்ஜிஆர் இலவச கணினி பயிற்சி மையத்தில் தேர்ச்சி பெற்ற 45 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழும் புதிதாக சேர்ந்துள்ள மாணவ- மாணவிகளுக்கு சேர்க்கை அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி புழல் எம்ஜிஆர் மன்ற வளாகத்தில் புழல் 24 வது வார்டு அதிமுக செயலாளர் எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது. மாதவரம் பகுதி அதிமுக செயலாளர் வேலாயுதம், வார்டு நிர்வாகிகள் பரமேஸ்வரன், அருள்மணி, செல்வம், விஜயலட்சுமி, ராவணன், கவிஞர் சித்திரவேல், சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான மாதவரம் வி.மூர்த்தி கலந்து கொண்டு கணினி பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் புதிதாக சேர்ந்துள்ள 45 மாணவ மாணவிகளுக்கு சேர்க்கை அடையாள அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் 23 வது வார்டு அதிமுக செயலாளர் இளங்கோவன், நரேந்திரன், மெட்ரோ தாஸ், செழியன், கணினி பயிற்சியாளர்கள் சந்தியா, அகிஷா கமலின் மற்றும் 24 வது வார்டு நிர்வாகிகள் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.முன்னதாக வார்டு செயலாளர் விஜயனுக்கு கணினி பயிற்சி பெற்ற மாணவ மாணவிகள் சார்பில் நினைவு பரிசு வழங்கினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சத்துணவு மையங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. சட்டமன்ற கூட்டத்தொடரில் மானியக் கோரிக்கையின்போது இதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டும் என வலியுறுத்தினர். மாவட்ட நிர்வாகி புனிதவள்ளி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் திரளாக பங்கேற்றனர்.

# தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்தில் குடிநீர், பூங்கா மற்றும் மேம்பாட்டு பணிகள் தீவிர ஆய்வு செய்த மண்டல தலைவர் டி.காமராஜ்

தாம்பரம், ஆக்,27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியின் மேற்கு தாம்பரம் பகுதிக்குட்பட்ட பல்வேறு வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதி பணிகளை பகுதி திமுக கழக செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவருமான டி.காமராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



முதற்கட்டமாக, மேற்கு தாம்பரம் பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக பணிகளை ஆய்வு செய்த அவர், பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, தாம்பரம் மாநகராட்சி 49வது வட்டத்தில் சர்வீஸ் சாலையின் மேம்பாலம் கீழ் உள்ள பகுதியை சுத்தப்படுத்தி பூங்கா அமைக்க வேண்டும் என்ற பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் கோரிக்கையின் பேரில், அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார். பூங்கா அமைப்பதற்கான சாத்தியமான இடங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், 54வது வட்டம் சாய்நகர் 5வது தெருவில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் விளையாட்டு திடல் பணிகளையும் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எஸ். ஜி.கருணாகரன், நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும், 54வது வட்டத்தில் உள்ள ஹரிதா என்க்ளேவ் பகுதியில் நடைபெற்று வரும் கால்வாய் அமைக்கும் பணிகளை மற்றும் 56வது வார்டில் முதல்வர் படிப்பகம் கட்டிடங்களை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, பணிகளை தரமாகவும் விரைவாகவும் நிறைவேற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இறுதியாக, 57வது வட்டத்தில் உள்ள பொன்னியம்மன் கோயிலில் நடைபெற்று வரும் குளம் சீரமைப்பு மற்றும் 61 வது வார்டு பகுதியில் சிறிய மேம்பாலம் இணைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மாமன்ற உறுப்பினர் ஹேமாவதி சேகர், 57வது வட்ட செயலாளர் எஸ். ஐசக், டி.கே.கோட்டி, அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

தாம்பரம் மாநகராட்சியில் குடிநீர் வசதி, விளையாட்டு திடல், கால்வாய் மற்றும் பூங்கா உள்ளிட்ட மக்கள் நலப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளி கல்வித்துறை சார்பாக ஆட்சியருடன் காபி" (Coffee with Collector)—நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் 25.08.2026 அன்று கலந்துரையாடினார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளனர்.

# அனந்தேரி ஊராட்சியில் ஆக்கிரமிப்பையை அகற்ற மாவட்ட ஆட்சியர் 03.10.2023 அனுப்பிய கடிதத்தை அலட்சியப்படுத்தும் வருவாய்துறை

திருவள்ளூர், ஆக.27-

திருவள்ளூர் மாவட்டம் போந்தவாக்கம் மற்றும் அனந்தேரி ஊராட்சிகளின் வழியாக செல்லும் வலக்கரை நீர் வரத்து கால்வாய்கள் ஆரணி ஆறு பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ளதாக கூறப்படுகிறது இந்த வலக்கறையை சிலர் ஜேசிபி வைத்து உடைத்து சமன் செய்து பயிர்செய்து வருவதாகவும் ஆக்கிரமிப்பை அகற்றி பொதுப்பணித்துறை (நீர்பாசன) கட்டுப்பாட்டில் கொண்டுவந்து பென்சிங் பேட வலியுறுத்தி டி.என்.பிஎஸ்பி) மாவட்ட நிர்வாகி பகுஜன் விக்கி முதலமைச்சரின் தனி பிரிவுக்கு 08.07.2023 அன்று புகார் அளித்ததாக சொல்லப்படுகிறது அந்தப் புகாரின் அடிப்படையில் அப்போதைய மாவட்ட ஆட்சியர் வருவாய்த்துறை (ரெவினியூ)நிதியிலிருந்து 46 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்து ஊத்துக்கோட்டை வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறையினருக்கு 03.10.2023 அன்று கடிதம் அனுப்பியதாக கூறப்படுகிறது



ஆனால் இதுவரைக்கும் ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் அந்தத் திட்டத்தை செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டு விட்டதாகவும் மாவட்ட ஆட்சியரின் கடிதத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலக நிர்வாகம் மற்றும் ஊத்துக்கோட்டை பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த் (ரெவினியூ) துறையினர் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தி வருவதாகவும் குற்றம் சாற்றப்படுகிறது எனவே தற்போதைய மாவட்ட ஆட்சியர் ச.கவிதா கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து கிடப்பிலே போடப்பட்ட திட்டத்தை செயல்படுத்தி ஆக்கிரமிப்பை அகற்றி ஆரணியாறு வலக்கரையை மீட்டு (நீர்பாசன) பொதுபணி துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலவர்களின் எதிர்ப்பார்பு.



# கிரசென்ட் பல்கலைகழகத்தில் செயற்கை நுண்ணறிவு குறித்த சர்வதேச மாநாடு

வண்டலூர், ஆக்.27-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் உள்ள பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில், செயற்கை நுண்ணறிவு, உயிரித்தகவலறிவியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பம் குறித்த இரண்டு நாள் சர்வதேச மாநாடு நடைபெற்றது.

கிரசென்ட் நிறுவனத்தின் உயிர் அறிவியல் துறை மற்றும் ஈஸ்ட்லண்டன் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய இந்த மாநாடு ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

தொடக்க நிகழ்ச்சியில் உயிர் அறிவியல் துறை புலமுதல்வர் பேராசிரியர் முனைவர் எஸ். ஹேமலதா வரவேற்புரையாற்றினார். நிறுவனத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஏ. பீர்முகமது தலைமையுரையாற்றி, சுகாதாரம் மற்றும் உயிரித்தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறிவின் வளர்ந்து வரும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

நிறுவனத்தின் பதிவாளர் பேராசிரியர் முனைவர் என். ராஜா ஹுசைன், நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கலாச்சாரம் மற்றும் உயிர் அறிவியல் துறையின் சாதனைகள் குறித்து பேசினார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள MAIWP இன்டர்நேஷனல் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆராய்ச்சி மேலாண்மை மைய இயக்குநரும் சிறப்பு விருந்தினருமான வாசுதேவன் ராமச்சந்திரன் தொடக்கவுரையாற்றினார். உலகளாவிய ஆராய்ச்சிப் போக்குகள் குறித்து அவர் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று, உயிரித்தொழில்நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள் தொடர்பான தங்களது ஆய்வுக் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், ஈஸ்ட்லண்டன் பல்கலைக்கழக மாணவர்களும் தங்களது ஆராய்ச்சிப் பணிகளை சமர்ப்பித்தனர்.

சுமார் 300 பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த மாநாட்டில், வாய்மொழி மற்றும் சுவரொட்டி அமர்வுகள் மூலம் பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அறிவுப் பகிர்வு, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கான முக்கிய தளமாக அமைந்த இந்த மாநாடு, உயிர் அறிவியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் கல்வியை மேம்படுத்துவதில் கிரசென்ட் நிறுவனத்தின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தியது.

# சோழவரம்,ஒரக்காடு சாலையில் கனரக வாகனங்களை தடுக்க கோரி CPM கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு

திருவள்ளூர், ஆக.27-

திருவள்ளூர் மாவட்டம்சோழவரம் ஒரக்காடு,பூதூர் வழியாக செல்லும் சாலையில் கனரக வாகனங்களில் சாம்பல் ஏற்ற செல்லும் வாகனங்களால் சாலை மிகவும் சேதம் அடைந்து விட்டதாகவும் இவ்வழியாக செல்லும் பொது மக்களுக்கு இதனால் சிரமம் ஏற்பட்டுவதாகவும் சைக்கிள் பைக் நடந்து செல்லும் நபர்களுக்கும் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் குறித்த நேரத்தில் பள்ளிக்கு செல்ல முடியாத சுழல் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் கண்ணெரிச்சல்,காசநோய், புற்றுநோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகவும் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுவதால் காவல் துறை வழியாக கனரக வாகனங்கள் செல்ல தடையென தகவல் பலகை வைத்துள்ளதையும் மீறி வழியாக வாகனங்கள் செல்வதால்






உடனடியாக மழைக்காலம் தொடங்கும் முன்பாக சாலையை சீரமைக்கவும் வாகனங்களில் இவ்வழியாக செல்வதை தடுக்கவும் வலியுறுத்தி சோழவரம் ஒரக்காடு கூட்டு சாலையில் CPIML கட்சியின் சார்பில் சாலை மறியலில் ஈடுபட்டனர்

இந்த ஆற்பாட்டத்திற்கு CPIML மாவட்ட செயலாளர் ஜானகி ராமன் தலைமையில் நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட குழு உறுப்பினர் சேஷாத்திரி மற்றும் வழக்கறிஞர் டிசைன்ராஜ் சமூக ஆர்வலர்கள் ரமேஷ், காசி விஷ்வநாதன், அரசகுமார், மனோகரன் முன்னிலையில் ஏராளமானோர் கலந்து கொண்டு சாலையில் மறியல் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு தடுப்புகள் அமைக்கப்பட்டது.பின்னர் தடுப்புகளின் உள்ளேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரக்காடு ரோடு பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், பொது சுகாதாரத்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. உடன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவ நல பணிகள்) மரு.ராஜசேகர், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்



தேனி, ஆக.27-
தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# செங்குன்றத்தில் மீலாதுன் நபி ஊர்வலம்



மாதவரம், ஆக.27-
மாதவரம் தொகுதி செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் நபிகள் நாயகம் (ஸல்) 1501ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மீலாதுன் நபி ஊர்வலம் மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் காஜாமொய்தீன் தலைமையில் நடைபெற்றது. மஸ்ஜிதே ஆயிஷா தலைமை இமாம் முனைவர் மௌலவி காஜாமுயீனுத்தீன்ஜமாலி பிரார்த்தனையுடன் தொடங்கிய ஊர்வலம் மஸ்ஜிதே ஆயிஷாவில் தொடங்கி செங்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட ஜி.என்.டி சாலை, திருவிக தெரு, தேவகி தெரு, வேணுகோபால் தெரு, வஉசி தெரு, அம்பேத்கர் தெரு, அண்ணா தெரு, மேட்டுத் தெரு, பிள்ளையார் கோவில் தெரு உள்ளிட்ட பல்வேறு தெருக்கள் வழியாக வண்டி மேடு பகுதிக்கு வந்தடைந்தது. செயலாளர் அப்துல் லத்தீப், துணைத்தலைவர் ஹாபிழ் அக்பர்பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்த ஊர்வலத்தில் மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சேட்டு, அப்துல் வாஹித், ஷாநவாஸ், சாகுல்அமீது, கலீல்ரஹ்மான் உள்ளிட்ட மதரஸா மாணவ - மாணவிகள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நபிகளார் பொன்மொழிகள் பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# மக்கள் நலனுக்காக இரு கட்சி தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடல்





திருப்பத்தூர், ஆக.27-
லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவன தலைவரும் & புதுச்சேரி சட்ட மன்ற உறுப்பினருமான ஜோஸ் சார்லஸ் மார்டின் எம்எல்ஏ அவர்களை ஊடக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவன தலைவர் வி.எம்.தமிழன் வடிவேல் புதுச்சேரியில் உள்ள லட்சிய ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இரு கட்சி தலைவர்களும் சந்தித்து மக்களின் நலனுக்காக கலந்துரையாடினார்கள். இந்த சந்திப்பின்போது ஊடக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில பொருளாளர் ராஜசேகர், மாநில இளைஞரணி தலைவர் ஆனந்தகுமார், மாவட்ட செயலாளர்கள் மோகன்ராஜ் (திருப்பத்தூர்), கடமை காமராஜ் (திருவண்ணாமலை), தலைமை அலுவலகம் சுரேஷ், டெல்டா மண்டல பொறுப்பாளர் ஜோதி மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகம் முன்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் நடைபெற்ற போராட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் வெங்கடேசன் தலைமை வகித்தார். கடந்த 4 ஆண்டுகளாக உதவித்தொகை உயர்த்தப்படாத நிலையில், உடனடியாக தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இதே கோரிக்கையை வலியுறுத்தி போச்சம்பள்ளி தாலுகா அலுவலகம் முன்பும் மாற்றுத்திறனாளிகள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.







# ஸ்ரீதர்மராஜாஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழா

மாதவரம், ஆக.27-
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீதர்மராஜா சமேத ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலயத்தில் 6-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் பெண்கள் தங்களது சிரசியில் பால்குடம் ஊர்வலமாக கொண்டு வந்து சுவாமிக்கு பால்அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இத னைத்தொடர்ந்து அம்மன் வர்ணித்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற் றது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து, அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் ஆலய மாடவீதி உலாநடைபெற்றது. மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.





# ஊத்துக்கோட்டை அருகே சுருட்டப்பள்ளி ஆலயத்தில் வெகு விமரிசையாக பிரதோஷ பூஜை

ஊத்துக்கோட்டை, ஆக.27-
ஊத்துக்கோட்டை அடுத்த நாகலாபுரம் மண்டலம் சுருட்டபள்ளிகிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பள்ளி கொண்டேஸ்வரர் சுவாமி ஆலயத்தில் பிரதோஷ தினத்தை முன்னிட்டு நந்தீஸ்வரருக்கு வெகு விமர்சையாக சிறப்பு பூஜைகள் அபிஷேகங்கள் நடைபெற்றது இதனை முன்னிட்டு காலை 5 மணிக்கு ஆலயம் திறக்கப்பட்டு நந்தீஸ்வரருக்கு ஸ்ரீ வால்மீஸ்வரர் சுவாமிக்கு ஸ்ரீமரகதாம்பிகை அம்மனுக்கு ஸ்ரீதா ம்பத்தியதட்சணாமூர்த்திக்கும் மற்றும் ஆலயத்தில் உள்ள பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெற்றது நைவேத்தியம் சமர்ப்பித்துபக்தர்களுக்குபிரசாதம் வழங்கப்பட்டதுஇந்தப் பிரதோஷ சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட சென்னை உபயாதாரர்களுக்கு மற்றும் ஆலயசேர்மன் ராஜு நிர்வாகசெயலர் லதா மற்றும் ஆலய நிர்வாக கமிட்டி உறுப்பினர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது இந்த சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து தங்கள் நேர்த்தி கடனை செலுத்தி சாமி தரிசனம் செய்தனர்.



■ பிரதோஷத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம்,காவேரிப்பட்டினம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே பொன்னன் நகர் தமட்ட குட்டையில் அமைந்துள்ள நந்தி கேஸ்வரர் கோவிலில், சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்த நந்திகேஸ்வரர் .

# செங்குன்றம் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் உத்திராட ஓணம் திரு பூஜை விழா







மாதவரம், ஆக.27-
மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் ஹரிஹரசுத ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் ஸ்ரீ ஐயப்பன் சேவா சங்கம் சார்பில் உத்திராட ஓணம் திரு பூஜை விழா ஆலய நிர்வாகிகள் தலைமை குருசாமி வாசு மற்றும் தலைவர் தேவன், பொது செயலாளர் ராதாகிருஷ்ணன், பொருலாளர் ரமேஷ்பாபு, துணைத்தலைவர் உண்ணிகிருஷ்ணன், செயலாளர்கள் பாலாஜி, சஜிவ்குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடை பெற்றது. நிகழ்ச்சியில் ஸ்ரீ கணபதி பூஜையுடன், கணபதி ஹோமம், கலசபூஜை, கலச அபிஷேகம், உச்சிகாலபூஜை மற்றும் உற்சவருக்கு உத்திராட ஓணம் சத்யா படைக்கப்பட்டது. மாலையில் , ஆலய குத்துவிளக்கு ஏற்ற ப்பட்டு சுவாமிக்கு மஹா தீபாராதனை போன்றவை நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் கேரள பாரம்பரிய முறைப்படி அனைவருக்கும் உத்திராட ஓணம் சத்யா அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



■ நீலகிரி மாவட்டம் உதகை பெரிய பள்ளிவாசல் வளாகத்திலிருந்து, மிலாது நபியை முன்னிட்டு, பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீருகொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா உட்பட பலர் உள்ளனர்.

## கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில்

# குடிநீர் தட்டுப்பாட்டை போக்கிய ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தருக்கு பொதுமக்கள் பாராட்டு



திருப்பத்தூர், ஆக.27-
திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கிய ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன். ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கூறிய கோரிக்கையினை ஏற்று ஒரே நாளில் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் இரண்டு ஆழ்துளை கிணறுகளை சரி செய்து தினமும் 12 ஆயிரம் லிட்டர் தண்ணீர் பயன்பாட்டிற்கு வந்தது. இந்நிலையில் அவ்வப்போது வறச்சி காலம் என்பதால் தட்டுப்பாடு இருந்தும், பள்ளி மாணவ மாணவிகளில் அடிப்படை தேவை பாதிக்கக்கூடாது என உடனடியாக பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததற்கு பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.




# அன்னை தெரசா மகளிர் பல்கலை கழகம் சார்பாக நடைபெற்ற ஓணம் பண்டிகை கல்லூரி மாணவிகள் நடனம் ஆடி மகிழ்ச்சி

திண்டுக்கல், ஆக.27-
திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அட்டுவம்வம் பட்டி பகுதியில் அன்னைதெரசா மகளிர் பல்கலை கழகம் அமைந்துள்ளது. குறிப்பாக ஓணம் விழாவானது கேரளா மக்களால் சாதி, மத வேறுபாடின்றி பத்துப் நாட்கள் கொண்டாடப்படுகிறது. மக்களின் அன்பை பெற்ற அசுர மன்னரான மகாபலி ஆண்டுதோறும் தன் மக்களைக் காண வருவதை அடிப்படையாகக் கொண்டு இது கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் தற்போது ஓணம் பண்டிகை கேரளா மட்டும் இல்லாமல் பல்வேறு மாநிலங்களின் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பல்கலை கழகத்தின் துணை வேந்தர் கலா தலைமை தாங்கி குத்து விளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார். மேலும் கல்லூரி மாணவிகள் ஒரே மாதிரி கேரள பாரம்பரிய சேலை அணிந்து மலர்கனினால் அலங்கரிக்கப்பட்ட கோலங்களை சுற்றி மாணவிகள் மகாபலி மற்றும் கதகளி போன்ற வேடம் அணிந்து நடனம் ஆடினர். மேலும் கலை நிகழ்சிகள் நடைபெற்றன இதில் 500கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் பங்கேற்றது குறிப்பிடதக்கது.



# மானாமதுரையில் சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்த இருவர் கைது

சிவகங்கை, ஆக.27–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல் நிலைய போலீசார் நடத்திய சோதனையில், கீழங்காட்டுரைச் சேர்ந்த அமர்நாத் (24), ரயில்வே காலனியைச் சேர்ந்த ராஜமுகேஷ் (21) ஆகியோர் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்த ஆயுதங்களை பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர். மேலும், இருவரும் ஏற்கனவே வெவ்வேறு வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை (NBW) நிலுவையில் இருந்தவர்கள் என்பதும் தெரியவந்தது.

இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# நெய்வேலி லிக்னைட் பங்குகளை தனியாருக்கு விற்கக் கூடாது

## முரளீதரன் கோரிக்கை

சிவகங்கை, ஆக.27–

நெய்வேலி லிக்னைட் நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தின் 3 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் எஸ்சி, எஸ்டி பிரிவு மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் மேலமங்கலம் முரளீதரன் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய கனிமவளத் துறைக்குச் சொந்தமான நெய்வேலி லிக்னைட் நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்யும் நடவடிக்கையைத் தடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான ஆட்சிக் காலத்தில், நெய்வேலி நிலக்கரி சுரங்கப் பங்குகளை மத்திய அரசு தனியாருக்கு விற்க முயன்றபோது, தமிழக அரசே அந்தப் பங்குகளை வாங்கி நடவடிக்கை எடுத்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று தற்போதைய தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நெய்வேலி லிக்னைட் நிறுவனப் பங்குகள் தனியாருக்கு செல்லாமல் தடுக்க வேண்டும் என்றும் முரளீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.





# மானாமதுரையில் திமுக பிரமுகர் சிவா குற்றச்சாட்டு

# தவெகவின் இலவச கேஸ் சிலிண்டர் வாக்குறுதி தலைகீழ் மாற்றம்?

மானாமதுரை ஆக.27–

தமிழக வெற்றிக் கழகம் தேர்தல் வாக்குறுதிகளில் மக்களை ஏமாற்றும் வகையில் இரட்டை வேடம் போடுவதாக மானாமதுரை திமுக முக்கிய பிரமுகர் சிவா(27வது வார்டு செயலாளர் ) கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக மானாமதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவெக தலைவர் விஜய் ஆரம்பத்தில் எந்தவித நிபந்தனையும் இன்றி தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் ஆண்டுக்கு 6 இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என அறிவித்து மக்களிடம் கவர்ச்சிகரமான பிம்பத்தை உருவாக்க முயன்றதாகக் குறிப்பிட்டார்.



■ சிவா 27 வது வார்டு திமுக கிளைச் செயலாளர் சியோன் நகர் மானாமதுரை

ஆனால், தற்போது அந்த வாக்குறுதி முற்றிலும் மாற்றப்பட்டு, ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் மட்டுமே வழங்கப்படும் என்றும், அதற்கு பல்வேறு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்குள் இருக்க வேண்டும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிந்த பிரிவினருக்கு மட்டுமே முன்னுரிமை என்றெல்லாம் புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அனைவருக்குமான திட்டம் என்று கூறிவிட்டு, தற்போது தகுதி வரம்புகளைச் சுருக்கி மக்களை தவெக ஏமாற்றி வருவதாகவும், தேர்தல் களத்தில் இத்தகைய நம்பகத்தன்மையற்ற வாக்குறுதிகள் மக்களிடம் எடுபடாது என்றும் அவர் கூறினார்.

# சிவகங்கையில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள்





சிவகங்கை ஆக,27–

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை சார்பில் சிவகங்கை மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பல்வேறு மையங்களில் நடைபெற்றன.

மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி, புனித ஜஸ்டின் மேல்நிலைப்பள்ளி, புனித மைக்கேல் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட மையங்களில் நடைபெற்ற போட்டிகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 750–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

நாட்டுப்புற நடனம், பரதநாட்டியம், பறை, நாதஸ்வரம், புல்லாங்குழல், பொம்மலாட்டம், தனிநபர் நடிப்பு, வீதி நாடகம், ஓவியம், களிமண் சிற்பம், வில்லுப்பாட்டு உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளை முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி தொடங்கி வைத்தார். கல்வித்துறை அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் விழுப்புரத்தில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். ஏற்பாடுகளை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ மற்றும் கல்வித்துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.





# மிளகனூரில் நீண்டநாள் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு

மானாமதுரை, ஆக.27–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மேற்கு ஒன்றியம் மிளகனூர் கிராமத்தில் நீண்ட நாட்களாக குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து மிளகனூர் கிளைச் செயலாளர் இராமலிங்கம் அளித்த கோரிக்கையை தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழகம் மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் சரண்ராஜ் நடவடிக்கை மேற்கொண்டார்.

இதையடுத்து, கழக உறுப்பினர் சதிஷ்குமார் ஏற்பாட்டில் கொம்புக்காரனேந்தல் பகுதியில் பழுதடைந்த குடிநீர் குழாய் கண்டறியப்பட்டு உடனடியாக சீரமைக்கப்பட்டது. இதனால் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேவகோட்டையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை; 3 பேர் கைது

தேவகோட்டை ஆக–27

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் நடத்திய தீவிர சோதனையில், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக 3 பேர் கைது செய்யப்பட்டனர். தேவகோட்டையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் (26), மனோஜ்குமார் (25), ஸ்ரீகாந்த் (25) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 57 பாக்கெட் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுதொடர்பாக 3 பேர் மீதும் COTPA Act–ன் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



# சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் 7வது நாளாக தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

சென்னை, ஆக.27–

பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, தனியார்மயமாக்கலுக்கு எதிர்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் தூய்மைப் பணியாளர்கள் தொடர்ந்து 7வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முதலமைச்சரை சந்திக்கும் வரை போராட்டத்தை வாபஸ் பெறப்போவதில்லை என்றும், 100 நாட்கள் ஆனாலும் போராட்டம் தொடரும் என்றும் தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.





■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய கோயிலில் இன்றைய நிகழ்வாக கும்பாபிஷேகத்தின் நான்காம் நாள் யாக வேள்வி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதன் நிகழ்ச்சியாக போடிநாயக்கனூர் எல்லையில் உள்ள சாலை காளியம்மன் கோயிலில் கலச தீர்த்தம் எடுத்து பொதுமக்களும் பக்தர்களும் யாக நிகழ்ச்சியாக சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பரம்பரை அறங்காவலர் திரு முத்துராஜ பாண்டியன் செயல் அலுவலர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இன்றைய நிகழ்வின் உபயோதாரராக ராக்கி பாண்டி, முத்துப்பாண்டி தலைமையில் சிறப்பாக விழா நடைபெற்றது

# பழனி அரசு மருத்துவமனையில் பணிநீக்கம் செய்யப்பட்ட அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் பணி ஆணை வழங்க வேண்டும் இல்லை என்றால் கடும் போராட்டம் : எம்.பி. சச்சிதானந்தம் ஆவேச பேட்டி

திண்டுக்கல். ஆக.27–

திண்டுக்கல் மாவட்டம் பழனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நீண்ட வருடங்களாக இருபதுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வந்தனர்.

தொடர்ந்து கொரோனா காலத்திலும் தங்கள் உயிரை பெரிதும் மதிக்காமல் கொரோனா வார்டுக்குள் சென்று தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் தற்பொழுது ஒப்பந்த நிறுவனம் மாற்றப்பட்ட நிலையில் ஸ்மித் என்ற தனியார் நிறுவனம் டெண்டர் எடுத்துள்ளது.

தொடர்ந்து பழைய ஆட்களை நியமிக்காமல் புதிய ஆட்களை நியமித்து மருத்துவமனையை நிர்வாகம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த பத்து ஆண்டுகளாக தூய்மை பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் தங்களை வேலைக்கு சேர்க்க வேண்டும் என புதிய நிறுவனத்திடம் பலமுறை கோரிக்கை அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மாவட்ட சுகாதார அதிகாரி மாவட்ட ஆட்சியர் என



அனைவரிடமும் கோரிக்கைகள் அளிக்கப்பட்ட நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

இதனைத் தொடர்ந்து அனைத்து பணியாளர்களும் ஒன்றாக இணைந்து மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதனை விசாரித்த நீதிபதி அனைவரையும் உடனடியாக பணியில் சேர்க்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையிலும் தொடர்ந்து ஸ்மித் என்ற தனியார் நிறுவனம் தூய்மை பணியாளர்களை பணியில் சேர்க்க மறுத்து வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் மருத்துவமனை நுழைவாயில் முன்பு குடும்பத்துடன் காத்திருப்பு போராட்டம் அறிவிப்பு செய்து நடைபெற்று வருகின்றன.

இந்த போராட்டத்தின் சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் கலந்து கொண்டு போராட்டத்தை தொடங்கி வைத்து பல்வேறு கோஷங்களை எழுப்பினார்.

இந்நிகழ்வில் நகர்மன்ற துணைத் தலைவர் கந்தசாமி தலைமையில் சிஐடியூ அனைத்து தூய்மை பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

மேலும் பத்திரிகையாளர்களிடையே பாராளுமன்ற உறுப்பினர் கூறுகையில் மருத்துவமனையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தூய்மை பணி செய்து வந்த நிலையில் புதிதாக ஒப்பந்தம் எடுத்த நிறுவனம் பணியில் அமர்த்த மறுக்கக்கூடாது அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு விடும். நீதிமன்றம் வரை சென்று நீதியானை வாங்கிய பின்பும் பணியில் அனுமதிக்காமல் இருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் உடனடியாக தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் சுகாதாரத் துறை அமைச்சர் அருண் ராஜ் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி மற்றும் மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் தலையிட்டு பழனி மவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்து வந்த அத்தனை தூய்மை பணியாளர்களுக்கும் உடனடியாக வேலை வழங்க வேண்டும் இல்லை என்றால் தொடர்ந்து அனைத்துக் கட்சி பிரமுகர்களை அழைத்து குடும்பத்துடன் காத்திருப்பு போராட்டம் மற்றும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161